கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

சத்தியவேத

# பாதுகாவலன்

மலர்: 97 இதழ்: 31
ஆவணி 19 — 1972
பிரதி சதம் 15

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது விண்"

## அணுஆயுதப் பெருக்கத்தடையில் வத்திக்கான் கைச்சாத்து

அழிவுக்குக் காரணமாகவுள்ள அணு ஆயுதப் பெருக்கத்தடை ஒப்பந்தமொன்று லண்டன், வாஷிங்டன், மஸ்கோ அரசாங்கங்களுக்கிடையே ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டிருப்பதை நேயர் அறிவர். அண்மையில் இந்த ஒப்பந்தத்தில் வத்திக்கானும் கைச்சாத்திட்டிருக்கின்றது? அவ்வைபவத்தில் இவ்வொப்பந்தக் காரியாலய தலைவர் செய்த சொற்பொழிவில் "அணு ஆயுதங்கள் செய்யும் முயற்சியில் சற்றேனும் சம்பந்தமில்லாத வத்திக்கான் அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன் நோக்கம் தெட்டத் தெளிவாக யாவருக்கும் புலனாகின்றது. இந்த ஒப்பந்தத்தின் அவசியத்தை எடுத்துக்காட்டவே வத்திக்கான் சித்தங்கொண்டு இதில் கைச்சாத்திட முன்வந்திருக்கின்றது. இதனால் வத்திக்கான் தரும அங்கிகாரத்துக்கு உலகம் மாபெரும் கடமைப்பட்டுள்ளது" என்றார்:

## வீரத்தன்மையுடன் விசுவாசிகள் அமையவேண்டும்

அண்மையில் பரி. தந்தை 6-வது சின்னப்பர் அளித்த பகிரங்க பேட்டியில் விசுவாசிகள் திருச்சபையின் அதிகாரத்துக்குப் பிரமாணிக்கத்துடன் வீரத்தன்மை தொனிக்கும் பான்மையில் அமைந்து நடக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். திருச்சபையின் அதிகாரம் கிறீஸ்துநாதரினாலேயே கொடுக்கப்பட்டது என்றும், மாற்றி அமைக்கக் கூடாதனவற்றுள் அதுவும் ஒன்று என்றும் சுட்டிக்காட்டினார். கிறிஸ்துநாதரினாலேயே திருச்சபைக்கு ஆளும் அதிகாரமும், அதன அமைப்பும் கொடுக்கப்பட்டதனால் அதை எவ்வகை மாற்றமுமின்றிப் பாதுகாப்பது விசுவாசிகளின் கடமை என்று கூறிய பரி. தந்தை மேலும் தமது உரையில் திருச்சபை முறைகளிற்பல மாற்றியமைக்கப் பட்டதையும் சுட்டிக்காட்டி அவ்வாறு மாற்றியமைத்ததனால் ஏற்பட்டுள்ள நன்மைகளையும் விசுவாசிகள் உணரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## யாருக்குப் பொதுமன்னிப்பு

தான் கட்டிய பாவங்களைக் குருவானவருக்கு எடுத்துரைக்க முடியாதிருக்கும் போது, பாவமன்னிப்புப் பெறுவது பற்றி அண்மையில் வத்திக்கானிலிருந்து கிடைத்த விளக்கம் தெளிவாக்குகின்றது. அவ் விளக்கத்தில் குருவானவருக்குப் பாவங்களை வெளிப்படுத்த முடியாத பான்மையில் மரணம் எதிர்வரும்பொழுதும் தனித்தனி பாவசங்கீர்த்தனம் செய்துகொள்ள முடியாது காத்து நிற்கும் மனஸ்தாபமுள்ள விசுவாசிகளின் தொகை பெரிதாயிருக்கும்பொழுதும் குருவானவர் பொதுவான பாவமன்னிப்பு அளிக்கலாமெனக் கூறப்பட்டிருக்கின்றது. இது வத்திக்கானின் விளக்கமாயி[illegible]ம ஒவ்வொரு தேசத்திலும் இருக்கும் நிலைமையைச்சீர்தூக்கி அப்பகுதி ஆயர்சபையினரே இறுதியான முடிவு செய்துகொள்வர். சில தேசங்களில் குருமாரின் தொகை மிகக் குறைவாயிருப்பதினாலே பாவசங்கீர்த்தனம் செய்து திருநன்மை பெறவிரும்பும் யாவரும் குருவானவரைக் கிட்டமுடியாதிருக்கின்றனர். ஆகவே இச் சலுகை சில இடங்களில் அவசியமாகின்றது. பொது மன்னிப்புப் பெறுகிறவர்கள் கூடியளவு சீக்கிரத்தில் தனிப் பாவசங்கீர்த்தனம் செய்யக் கடமைப்பாடு உடையவர்.

## பிதாப்பிதா அத்தனகோறஸ் அடிகளாரின் ஒப்பற்ற சேவை

கொன்ஸ்தாந்திநோபிள் பிதாப்பிதாவாகிய அத்தனகோறஸ் அடிகளார் ஆடி மாதம் 6ஆம் திகதி காலஞ்சென்றார் என்ற துக்க சங்கதி பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசரை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டது. கத்தோலிக் கிறிஸ்தவ சபைகளை விட்ட மறு கிறிஸ்தவசபைகளில் மிகப் பெருந் தொகையினரின் ஆன்மபிதாவாகிய அத்தனகோரஸ் அடிகளாரும் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்பரும் ஆப்த நண்பர்கள் என்பதை அகில உலகமுமே நன்கறியும். கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமைக்கு அயராது உழைத்து வந்தவர்களில் அத்தனகோரஸ் அடிகளாரும் ஒருவர். இந்த நோக்கத்துடன் அவர் வத்திக்கானுக்கு விஜயம் செய்து பாப்பரசர் சின்னப்பருடன் பல ஆலோசனைகளையும் நடத்தியிருக்கின்றார். பரிசுத்த தந்தை செய்திருக்கும் பல உலக யாத்திரைகளுள் முதலாவதாக நடந்தேறிய பலஸ்தீன யாத்திரையின் போது அவர் அத்தனகோரஸ் அடிகளாரின் இல்லம் சென்று, அவரைத் தழுவி அணைத்து அன்பு கொண்டாடிய காட்சி எவர் மனதையும் இன்னும் விட்டகலவில்லை. அத்தனகோரஸ் அடிகளார் மரணிக்கும்போது அவர் வயது 86 அத்தனகோரஸ் அடிகளாரின் இடத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் பிதாப்பிதா டெ மெறியுஸ் அடிகளார் அத்தனகோரஸ் அடிகளாரின் ஒற்றுமைப் பாதையிலே பின்பற்ற வாக்குப் பண்ணியிருக்கிறார்.

### கன்னியாஸ்திரிகளுக்கும் உயர் விவசாய பயிற்சி

இலங்கை அரசாங்கத்தின் நோக்கங்களுக்குக் கல்வி முயற்சிகளில் கூடியளவு ஒத்துழைப்புக் கொடுப்பதற்கெனக் கொழும்பு அக்குவைனஸ் ஸ்தாபனத்தில் உயர்விவசாய விஞ்ஞானபயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இவ்வருடம் சுமார் 200 மாணவ, மாணவிகள் அங்கு பயிற்சிபெற்று வருகின்றனர். அடுத்த வருடத்தில் பலகன்னியர்கள் அவ் வகுப்பில் சேர்வதற்கு ஏற்கனவே விண்ணப்பித்திருக்கின்றனர். எல்லாவித அரசாங்க உத்தியோகங்களும் ஆண்களைப் போலவே பெண்களும் வருங்காலத்தில் பெறக் கூடியதாய் இருப்பதாலும், நாட்டின் எதிர்காலம் விவசாயத்திலும், கைத்தொழிலிலுமே தங்கியிருப்பதாலும் மாணவர்போலவே மாணவிகளும் பயிற்சிபெற வேண்டிய அவசியத்தைஉணர்ந்தே முன்யோசனையுடன் கன்னியாஸ்திரிகள் உயர் உவசாய விஞ்ஞான பயிற்சியை நாடுகின்றனர்.

### மனித மூளைகளும் மாற்றமா?

ஐக்கிய அமெரிக்க தேச வைத்திய நிபுணர் கலாநிதி றொபெட் வைற் என்பவர் அண்மையில் பாப்பரசரை அவரது கோடைகால வாசஸ்தலத்தில் பேட்டிகண்டார். இவரின் வயது 41. மனித இருதயங்கள், வேறு பாகங்கள் ஒருவரிலிருந்து ஒருவருக்கு மாற்றப்படுவது எவ்வாறு சாத்தியமாக இருக்கின்றதோ அவ்வாறே மனிதமூளைகளும் மாற்றப் படலாமென இவர் நம்பிக்கையுடையவராய் இருக்கின்றார். இத்தகைய சிகிச்சையின்காலம் அண்மித்துவிட்டதென அவர் பத்திரிகையாளருக்குக் கூறினார்.

### கொலம்பியாதேச ஆயர்மார் தம் அறிவைவளர்க்க முயற்சி

2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பயனாக திருச்சபையைப் புதுப்பிக்கும் முயற்சிகளில் தமக்குள்ள கடமைகளை நன்கு அறிந்துகொள்ள தென் அமெரிக்க கண்ட கொலம்பியா தேச மேற்றிராணிமார் இவ்வருடம் ஆடி ஆவணி மாதங்களில் 5 வாரகாலத்தை இதற்கென ஒதுக்கி வைத்திருக்கின்றனர். இந்த ஐந்து வாரகாலத்தில் இக் கருமத்தில் விசேஷ அறிவுடைய மறை வல்லுனர் பலர் இவர்களுக்கு உபதேசம் செய்வர்.

### வட கிழக்கு இலங்கையில் மீன்பிடிகாரருக்கு விசேஷ உதவிகள்

வடகிழக்கு இலங்கையில் மீன்பிடித் தொழிலுக்குப் பெயர்பெற்ற கொகிலாய், நாயாறுப் பகுதிகளில் தொழிலாற்றிவரும் அவ்வூர், வெளியூர் உழைப்பாளிகள குடிதண்ணீர், வீடு, வெளிச்சமின்றிப் பட்டுவரும் கஷ்டங்களை ஓரளவு நீக்கக் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் சென்ற சில மாதங்களாக எடுத்துவந்த முயற்சிகளின் பயனாக இத் தொழிலாளர்களுக்குப் பல விசேஷ சலுகைகள் அளிக்க அரசாங்கம் முன்வந்திருக்கின்றது. அண்மையில் அப்பகுதிகளைத் தரிசிக்கச்சென்ற மீன்பிடி-விவகார மந்திரி திரு. ஜோர்ஜ ராஜபக்ஷ அவர்கள் கிறிஸ்தவ தொழிலாளர்இயக்கத்தின் ஞான ஆலோசகராகிய வண. சிஸ்ரஸ் குருகுலசூரிய சுவாமியாருடனும் கொகிலாய்ப்பகுதியின் கட்டளைக்குருவாகிய வண. பொனற் கொன்ஸ்ரன்ரைன் சுவாமியாருடனும், அப்பகுதி அரசாங்க உயர் உத்தியோகத்தருடனும் ஆலோசித்து, அங்கு வேலைசெய்துவரும் தொழிலாளருக்குக் கடன்வசதிகளும், குடிதண்ணீர், வீடு, வெளிச்சம் முதலிய வசதிகளும் விரைவில் அளிக்க வாக்குப்பண்ணியிருக்கிறார்.

### சாரணர் இயக்கத்துக்கு ஜனாதிபதியின் பாராட்டு

அண்மையில் குருநாக்கல் மாவட்டத்தில நடந்த சாரணர் வைபவத்தின் இறுதி நாளில் பங்குபெற்ற ஸ்ரீ லங்கா ஜனாதிபதி வில்லியம் கோபல்லவா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவில் சாரணர் இயக்கம் இளம்பிள்ளைகளுக்கு இன்றியமையாத பயிற்சியை அளித்துவருகின்றதாகையால் ஒவ்வொரு பாடசாலையிலும் பெருந்தொகையாக மாணவ மாணவிகள் சாரணர் பயிற்சியைப் பெறுவது மிகவும் விருப்தக்கது என்றார். சாரணர் பயிற்சி சீவியத்தில் சரியான வழியைக் காட்டுகின்றது. தனக்கென வாழ்ந்து பிறருக்கும் உதவியாக வாழ வைக்கின்றது. சீவியத்துக்கு வேண்டிய பல வேலைகளையும பயிற்றுவிக்கின்றது. ஒத்து வாழக் கற்பிக்கின்றது. உடல் உழைப்பின் யோக்கியத்தை வற்புறுத்துகின்றது. ஆகவே சாரணர் பயிற்சியை வகுப்புப் படிப்புகளுடன் எமது பிள்ளைகள் பெறுவார்களாயின் வருங்கால செல்வாக்கைப்பற்றிய அச்சமே எவரும் கொள்ள அவசியமிராது என்றார் ஜனாதிபதி.

### உயிருக்கு உரிமைகோரும் இயக்கத்துக்கு நிக்சனின் ஆதரவு

உயிருக்கு உரிமைகோரும் இயக்கத்தின் மகாநாடு அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்றபொழுது ஐக்கிய அமெரிக்கதேச ஜனாதிபதி நிக்சன் அதற்கு அனுப்பியிருந்த வாழ்த்துரையில், விசேஷமாக கருநீக்கல் முயற்சிகளைத் தான் என்றும் எதிர்த்து வந்திருப்பதைக் குறிப்பிட்டு இம் முயற்சி மனித யோக்கியத்துக்கு வருவிக்கும் ஊழல்களை மக்கள் மனதில் ஆழப்பதிக்க இந்த இயக்கம்செய்துவரும்சேவையைப் பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாடு நலமாக இருப்பது அந்நாட்டு இளைஞர்களுக்குத் தரப்படும் கல்வியைப் பொறுத்தது.

*   *   *

கடவுளை அறியவும், வணங்கவும் தெரியாமல் என்ன கல்வி கற்றாலும் அது வீணே.

— ஓர் அறிஞர்

## சத்தியவேத பாதுகாவலன்

## பரலோக சிந்தனை

பூலோகத்தையே ஒரு சுவர்க்கமாக மாற்ற விழையும் இக்காலத்தில் பரலோகத்தையும் அதன் இன்பங்களையும் கற்பனைசெய்து பார்ப்பதுகூடக் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆன்மாவின் அழியாமையை விசுவாசிக்கும் மக்கள் தன்னும் இறந்தவர்கள் நித்திய இளைப்பாற்றியை அல்லது அமைதியை அடையவேண்டுமென்றுதான் பிரார்த்திக்கிறார்கள். மோட்ச இன்பத்தைப்பற்றி அறியாததால் அல்ல; அத்தகைய இன்பத்தை மனிதர் தம் அற்ப அறிவினால் கற்பனைசெய்து பார்க்க முடியாததும், உலகில் எண்ணற்ற அல்லல் தொல்லைகளால் வருந்துபவர்கள் அத்தொல்லைகளிலிருந்து விடுபடுவதே ஒரு இன்பம் என்று கருதுவதுமே இதற்குக் காரணமாகும்.

ஆனால் பரலோக சிந்தனையை எமக்கு மிக அண்மையில் கொண்டுவருவது என்று உண்டானால் அது எமது அன்னையின் விண்ணேற்பு விழாவாகும். ஆன்மாவில் மட்டுமல்ல, முழு ஆத்தும சரீரத்துடன் மோட்சத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தமது திருக்குமாரனின் கையினால் வானுக்கும், மண்ணுக்கும் அரசியாக முடிசூட்டப்பட்ட நிகழ்ச்சி மோட்சத்தில் மாதாவுக்குக் கிடைத்திருக்கும் மகிமையை மட்டுமல்லாது நாம் ஒவ்வொருவரும் அடையப்போகும் நிலையைக் கற்பனைசெய்து பார்க்கத் தூண்டுகிறது.

மாதாவுக்குக் கிடைத்துள்ள நிலை உன்னதமானது. அதற்குக் காரணமும் உண்டு. மாதாவின் உலக வாழ்க்கையும் உன்னதமானது. ஒரு கணமேனும் பாவமாசினால் தீண்டப்படாத வாழ்க்கை ஒவ்வொருகணமும் இறைவனின் திருச்சித்தத்தோடு தனது சித்தத்தை இணைத்து அவரது கருத்தைப் பூரணமாக நிறைவேற்றிய வாழ்க்கை. தான் உலகில் அனுபவித்த இன்பமும் துன்பமும் அனைத்துலக மீட்புக்கு இறைவன் வகுத்த திட்டத்தில் எவ்வாறு இடம்பெற்றன என்பதை அவள் பாலோகத்தில்தான் முழுமையாக உணர்ந்திருக்க முடியும். இறைவனுடைய திட்டம் தன் மூலம் எவ்வளவு செயல்பட்டுள்ளது என்பதைக் காண்பதே அவளுக்கு அளவற்ற ஆனந்தத்தைக் கொடுப்பதாய் இருந்திருக்கும். அதேபோலத்தான் எமது வாழ்க்கையிலும் நிகழும் இறைவனுடைய கருவிகளாக எந்தமட்டில் நாம் பயன்படுகிறோமோ, அவருடைய திட்டத்தில் பங்குகொள்ளுகின்றோமோ அவ்வளவுக்கு மோட்சத்தில் எமது இன்பம் அதிகமாய் இருக்குமென்று சொல்லலாம். இதை எமக்கு உணர்த்துவதற்கு, எமக்கு வழிகாட்டுவதற்குக் கிறிஸ்துநாதருடைய வாழ்க்கையும் மரியாயுடைய வாழ்க்கையும் இருக்கின்றன.

உலகத்தைச் சார்ந்தே எமது சிந்தனை ஓடிக்கொண்டிருக்காமல் பரலோகத்தை நோக்கி, நித்தியத்தைநோக்கி அது எழுவதற்கு மாதாவின் ஆரோபணம் ஒரு காந்த சக்தியாக இருக்கின்றது. இலௌகிக காரியங்களிலேயே அளவுக்கு மீறிக் கருத்தைச் செலுத்திக்கொண்டு, வாழ்வின் உண்மையான நோக்கத்தைமறந்து வாழும் இச்சந்ததியினர்க்கு அது ஒரு கலங்கரை விளக்கம். உலோகாயதக் கொள்கைகளினாலும், ஒழுக்கச் சீர்கேட்டினாலும் புண்ணியங்கள் மங்கிவருகையில், எமது உயிரும் உடலும் எத்தகைய உன்னத கதிக்காக ஏற்படுத்தப்பட்டவை என்பதை நினைவூட்ட ஒரு சிறந்த வழி.

ஆகவே உலகில் சிக்கல்கள், சோதனைகள் மத்தியிலே சூரியனை ஆடையாகக் கொண்ட மோட்ச இராக்கினி எமது துருவ நட்சத்திரமாக இருந்து வழிதவறிப் போகாதவாறு எம்மைக் காப்பாளாக.

## பாத்திமாபதிஆயர் ஓய்வுபெறுகின்றார்

பாத்திமாபதி ஆயராகக் கடமையாற்றிவந்த வந்தனைக்குரிய வலன்சியா பெரேரா ஆண்டகை சுகயீனத்தின் காரணமாக ஓய்வுகேட்டு அனுப்பிய விண்ணப்பத்தைப் பரிசுத்தந்தை ஏற்றுக்கொண்டார். அவரின் இடத்தில் வந். அல்பேட்டோ டி அமறல் ஆண்டகையவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவருக்கு வயது 57.

# நாட்டின் நிகழ்ச்சி

### வழி அனுப்புதல் :

இந்திய மக்களை அங்கே அனுப்பிவிடத் துடிக்கிறது இலங்கை அரசு. அவர்களை ஏற்றுக் கொள்வதற்குத் தயங்குகிறது, இந்திய அரசு. போகவேண்டிய மக்களோ நிலை தடுமாறுகிறார்கள். இப்படி ஒரு நிலைஏற்படும் என்று முன்பு அவர்களுக்குத் தெரியாது. இதுவரை தேடிய எல்லாவற்றையும் இந்தமண்ணில் விட்டுவிட்டுப் போகவேண்டும்.

### சொந்தநாடுபோகத் தயக்கம் :

அங்கேபோய் என்னசெய்வது? அந்த அரசு நல்லமுறையில் எங்களை நடத்துமா? இதுவரை இந்த அரசிற்கு உழைத்தோம்! இப்பொழுது வெறுங்கையுடன் நம் நாடு திரும்புகிறோம். அந்த அரசு எங்கள் காரியங்களை நன்மனதுடன் கவனிக்காவிடில் நிம்மதி கிட்டுமோ? இதுதான் அவர்கள் தயங்குவதின் காரணம்.

### எமக்கு ஒரு படிப்பினை :

உலகிற்கு நாம் அந்நியர். எங்களின் சொந்தநாடு மோட்சம். இது எல்லாமக்களும் அறிந்த இரகசியம். ஆனாலும் ஆன்மாவைப்பற்றி, மறுமையைப்பற்றி இப்பொழுது நினைக்க நாம் விரும்பவில்லை. ஆண்டவன், அந்த உலகம், இவற்றையெல்லாம் ஆர் கண்டது; இது எங்களின் நினைவு. அலகை காட்டும் அழிவிற்குரிய இன்பங்களில்மூழ்கி அறிவை இழந்துநிற்கிறோம். மண்ணை, பொன்னை, பணத்தை, புகழைத்தேடி மெய்வருந்த உழைக்கிறோம். பிறரை நாம் நினைப்பதில்லை. அவர்களுக்கு உதவி செய்வதில்லை! என்கடவுளையேமறந்து வாழுகிறோம். அவரின் கற்பனைகளைக் காற்றில் பறக்க விடுகிறோம். சுருங்கச் சொன்னால் "உலகிறகு ஊழியம் செய்கிறோம்." ஆனால் உலகை விட்டுக் கடவுளிடம் போக வேண்டியவர்கள் அல்லவா? நாம்,

### நாம் சிந்தித்தது உண்டா ?

பணம், பதவி, பொருள், கீர்த்தி எல்லாம் மறுமைக்கு உதவுமா? இவற்றை நாங்கள மறுமைக்குக் கொண்டுபோக முடியுமா? இல்லவேயில்லை! உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மை அல்லவா? இது. இருந்தும் இம்மையை மறுமைக்குப் பயன்படுத்த எங்களுக்கு மனம்இல்லை. இந்த உலகவாழ்வின் சொற்ப நாட்களை — இங்கே இறைவன் எங்களுக்கு அனுப்பிவைக்கும் சிறுமைகளை நன்மனதுடன் ஏற்றுக்கொள்ளுகிறோமா? துன்பங்கள் வரும் பொழுது நாங்கள் முறுமுறுக்கிறோம்; தேவனைத் தூஷிக்கிறோம்; விலக்கப்பட்ட இன்பங்களைத் தேடி ஓடுகிறோம். சரீரத்தையும் மனதின் வாஞ்சைகளையும் தண்டித்து ஒறுத்து நடப்பது எங்களுக்குக் கஷ்டமான காரியம். "தவத்தளவே ஆகும் தான் பெற்ற செல்வம்" (மறுமைப் பாக்கியம்) என்பதை நாம் சிந்திப்பதில்லை. தேவனையும் மோட்சத்தையும் நாம் இழந்துவிடுவோம்" என்று நெஞ்சுஇடித்துக் கூறுகிறது. மனச்சாட்சி கண்டிக்கிறது. நாங்கள் நிர்ப்பாக்கியராகவே நிலைத்திருக்கிறோம்.

### அழைப்பு வருகிறது :

மரணம் எங்கள் வாசலில் எட்டிப் பார்க்கிறது. உயிர் ஊசலாடுகிறது. அரைமனதுடன் மறுமைக்குப் புறப்படுகிறோம். தகுதியுடனா? இல்லை! "கலியாண உடுப்பு" பிரசாத அங்கி இல்லாமல்தான் போகிறோம். "நண்பனே! கலியாண உடுப்பு இல்லாமல் எப்படி இங்கே வந்தாய்?" "உன் கணக்கை ஒப்புவி"

**செல்வி**
**றோசலின் சூசைபபிள்ளை**

"நாம் உனக்குத்தந்த நாட்களை — உலகில் நீ இருந்த காலத்தை எப்படிச் செலவழித்தாய்?" என்று யேசு நம்மிடம் கேட்கமாட்டாரா? இதற்குப் பின்தான் எங்கள் ஆன்மாவின் நிலையைப் பார்த்து நாம் முழிப்பதா? முழித்தால் பிரயோசனம் கிடைக்குமா? "கண் குருடானபின்பா சூரியநமஸ்காரம்? "காலம் கடநது விட்டது. தருணத்தைத் தவற விட்டுவிட்டாய்" என்று தெய்வீகநடுவர் நிச்சயமாக எங்களுக்குச் சொல்லுவார்.

### நாம் செய்யவேண்டியது :

கற்பனைகள் என்னும் கடவுளின் நுகத்தைப் புறக்கணிக்காது நாம் வாழவேண்டும். ஏழைகள், நோயாளர், அனாதைகளைத் தேடி அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். தேவபயம் எம்மிடம் குடிகொள்ளவேண்டும். தேவனைப் பிரியப்படுத்துவதே எங்களின் இலட்சியமாக இருக்க வேண்டும். இப்படி நாம் வாழ்ந்தோமானால் — பூமியில் தேவன் எங்களுக்குத் தந்தவைதையும் இழந்தவர்களாக — நாங்கள் இருக்கமாட்டோம்.

### விழித்திருக்கிற ஊழியர் :

"எஜமான்வந்து தட்டும் பொழுது கதவைத் திறக்கும்படி விழித்திருக்கிற ஊழியரைப் போலவும்," "மணவாளனை எதிர்கொள்ளப் போகும் பொழுது தங்களுடன் எண்ணெய் எடுத்துச்சென்ற கன்னியரைப் போலவும்" நாமும் இருப்போம். அப்பொழுதுதான் "உலகம் உண்டானதுமுதல் உங்களுக்கென ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் இராச்சியத்திற் பிரவேசியுங்கள்" என்று சொல்லித் தெய்வீகஅரசர் — யேசு எங்களை உள்ளே அழைத்துச் செல்லுவார்.

### ஒருகல்லில் இரண்டுமாங்காய்:

'ஒருகல்லில் இரண்டு மாங்காய்' வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்பதுபோல் தேவனைப் பிரியப்படுத்தினவர்களாக நாம் விளங்குவோம். இம்மையில் பெற்றுக்கொண்ட அனைத்தையும் மறுமைக்குப் பயன்படுத்தினவர்களாகவும் நாம் இருப்போம்.

## பூசை வழிகாட்டி

### ஆவணி—1972.

21. திங்கள் : புனித பத்தாம் பத்திநாதர் [வெ]
**வாசகங்கள் :** எசெ. 34 : 1—11
மத். 19 : 16—22

22. செவ் : அரசியான புனித கன்னிமரியாள் [வெ]
**வாசகங்கள்:** இசை 9 : 2—7
லூக். 1: 39—47

23. புதன் : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** எசெ. 24 : 15—24
மத். 20 : 1—16

24. வியாழன் : புனித பார்த்தலோமேயு [சி]
**வாசகங்கள் :** திருவெளி. 21 : 9—14
அரு. 1 : 45—51

25 வெள்ளி : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** எசெ. 37: 1—14,
மத். 22: 34—40.

26. சனி : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** எசெ. 43 : 1—7
மத். 23 : 1—12.

27. ஞாயிறு : ஆண்டின் 21ஆம் ஞா. [ப]
**வாசகங்கள் :** இசை. 22 : 19—23
உரோ. 11 : 33—36
மத். 16 : 13—20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூரின் புனித அந்தோனியார் கல்லூரி நூற்றாண்டு விழா: 1872-1972

யாழ்ப்பாணக்குடாநாட்டின் வடமேற்கில் ஒரு தீவுக் கூட்டம் உண்டு. அவை அனைத்திலுள்ளும் கலை, கலாச்சாரம், நாகரிகம, வாழ்க்கை வசதிகள், அரச பணிமனைகள் கல்விக் கூடங்கள் போக்குவரத்து வசதிகள் என்னும் இன்னோரன்னவசதிகள் யாவும்பெற்று முதன்மையுற்று விளங்குவது லைடன் தீவாகும். அங்கு பண்டைய சிறப்புகளுடன் இன்றைய வனப்புகளும் ஒருங்கே பெற்றுத் திகழ்வது ஊர்காவற்றுறையாகும். தீவுப்பகுதியை கண்ணென விளங்கும் காவலூரின் பெருமைக்கும் வளர்ச்சிக்கும, தோன்றாத் துணையாக நின்றிலங்கி ஒரு நூற்றாண்டு காலம் கல்விப்பணியாற்றிய நிறுவனம் புனித அந்தோனியார் கல்லூரியாகும்.

தீவுப்பகுதியின் முதல் ஆங்கிலப்பாடசாலை இதுவேயாகும். அன்று யாழ் ஆயராயிருந்த மேன்மைதங்கிய பொஞ்ஜீன் ஆண்டகையின் காலத்தில் அவ்வேளை லைடன் தீவில் மறைத்தொண்டாற்றிய வண. யோசெவ் பொய்சோ சுவாமிகளால் 1872-ம் ஆண்டு பங்குனிமாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை உதய திசையில் உள்ள உத்தம கத்தோலிக்கர் ஒருவர் உபகரித்த ஒரு வீட்டிலேதான் இக்கல்விக்கூடம் உதயமானது. கல்விப் பணியில் முன்னின்று உழைத்த பெரியார்களுள் ஒருவரான திரு. எம். சுவாம்பிள்ளை என்பவரே இப்பாடசாலையின் முதற் தலைமையாசிரியராவர். இவர் காலஞ்சென்ற வண. பிதா எஸ்.ஜே. ஸ்ரனிஸ்லாஸ் அவர்களின் தந்தை என்பது குறிப்பிடற்பாலது. இல்லறத்தாரால நடாத்தப்பட்ட இப்பாடசாலை அதன் வளர்ச்சியும், எதிர்கால நலனும் நோக்கி கொழும்புத்துறை புனித சூசையப்பர் சபைத் துறவிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. 1896-ம ஆண்டு மேற்படி சபைத்துறவிகள் பாடசாலைப் பரிபாலனத்தைக் கையேற்றனர். சங். சகோதரர் டெனிஸ், சகோ. பற்றிக், சகோ. பிலிப் ஆகியோர் முதன் முதலில் இங்கு வந்து பொறுப்பேற்ற புனித சூசையப்பர் சபைத்துறவிகளாவர். இத்துறவிகளின் பரிபாலன காலமே புனித அந்தோனியார் கல்லூரி வரலாற்றின் பொற்காலமாகும். அரை நூற்றாண்டுக் காலமாக மேற்படி சபைத்துறவிகள் ஆற்றிய பணிகள் அளப்பரியன. அயரா உழைப்பாலும், கண்துஞ்சாது, பசிநோக்காது. உடல் வருத்தம் பாராது அவர்களது தியாகத்தாலும் இத்தாபனத்தை வளர்த்தனர். ஆரம்ப காலத்தில் கொட்டிற் பாடசாலையாகவே இது இருந்து வந்தது. சங். சகோதரர் பற்றிக் அவர்கள் பாடசாலைக்கு வேண்டிய காணியை வாங்குவதிலும், சங். சகோதரர் டெனிஸ் அவர்கள் கட்டிடத்திலும் கவனஞ் செலுத்தனர். முதலில் ஒரு சிறு பாடசாலை கட்டப்பட்டது. 1907-ம் ஆண்டு இப்பாடசாலை ஆங்கில சுயமொழிப் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. 1909-ம் ஆண்டு பழைய பாடசாலை புதுப்பிக்கப்பட்டு 136 அடி நீளமும் 36 அடி அகலமுமான புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. இதுவே இன்று ஊர்காவற்றுறை றோ. க. தமிழ் ஆண்கள் பாடசாலையாக அரசினால் பொறுப்பேற்றப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இப்பாடசாலையை அமைப்பதற்கு முக்கிய மூலகாரணமாயிருந்தவர் பெரிய பிறதர் என எல்லோராலும் அழைக்கப்பட்ட சங். சகோதரர் கே. பீலிக்ஸ் அவர்களே. இவர் 1902-ம் ஆண்டில் பாடசாலைப் பொறுப்பை ஏற்றார். மதியூகமும் அறிவும் ஆற்றலும், செயல்திறனும் இன்னோரன்ன பல தகுதிகளைப் பெற்று விளங்கிய அவர் சனங்களிடம் தமது செல்வாக்கைப் பிரயோகித்துபல உதவிகளைப் பெற்றார். இங்கு ஆங்கிலம் ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டதால் தூர இடங்களிலிருந்து பல மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்றனர். நெடுந்தீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை முதலாம் இடங்களிலிருந்து அநேகர் இங்கு வந்து கல்வி கற்றனர்.

1917-ம் ஆண்டு சங். சகோதரர் பாக்கியநாதர் அவர்கள் தலைமையில் சங். சகோ. லைசமன், சங். சகோ. அந்தோனிப்பிள்ளை, சங். சகோ. ஆசிர்வாதம், சங். சகோ. பேதுருப்பிள்ளை முதலானோர் பெருந்தொண்டாற்றினர். இக்காலத்தில் துறவிகளுடன் இல்லறத்தவர்களும் கல்வி கற்பிக்க சேவையில் அமர்த்தப்பட்டனர். கொழும்புத்துறையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இங்கு சேவை ஆற்றினர். இவர்களுள் சிறுவர்களைப் பயிற்றுவதில் சிறந்துவிளங்கிய திரு. ஏ. ஞானப்பிரகாசம் அவர்கள், திரு. ரி. எஸ். அருளானந்தம் அவர்கள், திரு. ஏ. ஆர். நீக்கலஸ் ஆகியோர் அண்மைக் காலமவரை சேவையாற்றி இளைப்பாறியவராவர். ஆங்கிலம் கற்பித்தற்பொருட்டு யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் சேவையாற்றி இளைப்பாறிய பல ஆசிரியர்கள் இங்கு சேவைக்கமர்த்தப்பட்டனர். அவர்களுள் திரு. புவிராஜசிங்கம், திரு. எவ். எக்ஸ். ஆர். பஸ்ரியாம்பிள்ளை முதலியோர் குறிப்பிடக்கூடியவர்கள். இவர்களைத்தவிர சப்பத்திரிசியார் கல்லூரியில் கல்விபயின்ற புனித சூசையப்பர் துறவிகள் சபைத்துறவிகள் பலரும் இங்கு நியமனம் பெற்றதனால் ஆங்கிலக்கல்வி சிறப்பாக வளர்க்கப்பட்டது.

கத்தோலிக்க பாடசாலைகளின் முகாமையாளராயிருந்த வண. போ சுவாமியவர்களின் முயற்சியால 1921-ம் ஆண்டு இப்பாடசாலை Primary English School ஆக உயர்த்தப்பட்டது. 28-2-22-ல் இது St. Antonys Elementary School" ஆக உயர்வு பெற்றது. 1926-ம் ஆண்டு முதன் முதல் E. S. L. C. பரீட்சையில நான்கு மாணவர் தோற்றி மூவர் கனிசித்தியடைந்தனர். அப்பொழுது அதிபராக சேவையாற்றிய சங். சகோத. பிரான்சிஸ் அவர்களின் முயற்சியினாலேயே

— வளன் —

பாடசாலைக்கு இச்சிறப்புக்கிட்டியது. அக்காலத்தில் நாடகங்கள், விளையாட்டுப்போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள் என்பன வருடாவருடம் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெற்றுவந்தன. 1928-ம் ஆண்டில் புதிய கல்லூரி கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெற்றோர் ஆசிரியர், உபகாரிகள், தாராள மனப்பான்மை கொண்ட பல பெருமக்கள், சங். சகோதரர்கள் முதலானோரின் உதவி ஒத்தாசையினால் புதிய ஆங்கில பாடசாலை 1931-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இதுவே பிரதான வீதியில் இன்று கம்பீரமாய் தோற்றமளிக்கும் பெரிய மண்டபத்துடனான பகுதியாகும். அனறு வித்தியாதிபதியாயிருந்த திரு. றொபின்சன் அவர்களால் புதிய கட்டடம் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. சங். சகோதரர் அலோஷியஸ் அவர்கள் கல்லூரி அதிபராகவும, சங் சகோ. யோண்மேரியன்னியவர்கள் தமிழ்ப்பாடசாலைத் தலைமையாசிரியராகவும் இருந்தகாலத்தில் கல்வி, விளையாட்டு, நாடகம், சங்கீதம் முதலிய துறைகளில் மிகவும மெச்சத்தக்க முன்னேற்றமடைந்து இத்துறைகள் சிறப்பாக நடைபெற்றன.

இக்காலத்தில் தமிழ்ப்பாடசாலை தனியாகப் பிரிக்கப்பட்டு விட்டது. புனித சூசையப்பர் சபைத்துறவிகள் 1938-ம் ஆண்டுவரை கல்லூரியை நடாத்தி வரலாயினர். கடைசிக்காலத்தில் சங். சகோதரர் பிலிப் அவர்கள் கல்லூரி அதிபராகவும், சங். சகோதரர் எஸ் லீனஸ் அவர்கள் தமிழ் பாடசாலைத் தலைமை ஆசிரியராகவும் கடமை ஆற்றினர். சங். சகோதரர் பிலிப் அவர்களே அக்காலத்தில் புனித சூசையப்பர் சபை, துறவிகளின் சிரேஷ்டராகவுமிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த கல்விமானும், இலங்கை அரசின் கல்வி ஆலோசகர் சபையின் பிரதான உறுப்பினருமாய் இருந்து கல்வித்துறையில் ஈழநாட்டுக்கு அரும்பணி ஆற்றிய பெரியாராவார். இவர் நாரந்தனையைப் பிறப்பிடமாய்க் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1939-ம் ஆண்டு முதல் இப்பாடசாலை குருமாரின் பரிபாலனத்துக்கு மாற்றப்பட்டது. எனினும் தமிழ்ப் பாடசாலை சங். சகோதரரின் நிர்வாகத்திலேயே இருந்தது. 1948-ம் ஆண்டுவரை தமிழ்ப்பாடசாலையை அவர்கள் நடாத்திவரலாயினர். ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாக புனித சூசையப்பர் சபைத்துறவிகளின் பரிபாலனத்தில் இக்கல்லூரி வித்து வளர்ந்து கிளை பரப்பி நற்பயன் கொடுக்கத் தொடங்கியது. இக்காலம் புனித அந்தோனியார் கல்லூரியின் பொற்காலமாகும், தன்னலமற்ற தியாக சேவையால் சங். சகோதரர் காவலூரின் மக்களால் பெரிதும் நேசிக்கப்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## ஈழத்தின் முதல் தமிழ் ஆயன்மீது பிரிவிரங்கல்

எங்கும் நிறைந்தவனாய் எல்லாமே ஆனவனாய்
என்றென்றும் உள்ளவனாய் எம்மிடையே—ஏற்றமிகும்
இன்றமிழில் இசைபாடி ஈழத்திரு நாட்டில்
இணையடிக்கு வைத்தேன் இறைவா!

ஈழ மணித்திருநாடு ஈன்றெடுத்த
இருந்தமிழின் முதல் ஆயன் எமிலியானுஸ்
இருந்தஇடம் தெரியாமல் பறந்தே போனாய்
இறகொடிந்த பறவைபோல் தவிக்கின்றோம் நாம்
தன்பெயரைத் தனித்தமிழில் மொழி பெயர்த்தால்
தலைவணங்கிப் போற்றாதோர் யாருமில்லை
எம்மோடுறை இறைவனெனும் எழிலதனை
எங்கிருந்தோ நீ பெற்றாய் ஏற்றந்தானே!

அன்பான பிள்ளைகளே என்றுன் வாயால்
அரியமொழி கேட்குமநாள் வருமோ ஐயா!
தெள்ளியதேன் அள்ளிவரும் உன்மொழியின்
தெவிட்டாத தேன்பாகை மறவோமையா
ஆழமாய் எண்ணுவதன் விளைவுதானோ?
அழகாகக் கிளிமொழியில் உரைகள் சொல்வாய்
அமைதியாய்த் தலைதாழ்த்தி நாணல் போல
நடப்பதிலும் நான்கண்டேன் அறிவின் ஆழம்.

மறையாயர் பணியேற்ற மறைமுதல்வா
மறைவாக மறைக்குள்ளே மறைந்திருந்த
குறைவான நெறிகளை நீ அழித்தாய் நன்று
நிறைவான அவற்றை நாம் மறவோமென்றும்
இறைமக்கள் அனைவோரும் ஒன்றும் என்ற
இருந்தமிழின் இலக்கணத்திற் கிலக்கியமாய்
திருமறையோர் ஒருமைப்பா டுணரவைத்த
சீர்திருத்தச் செம்மலே நீ வாழ்க என்றும்.

திருநாளின் பெயராலே திருமறையோர்
திருவிழா எடுக்கின்ற திக்கெல்லாம்
திசைமாறி ஓடுகின்ற வெள்ளம்போலே
பணவிழா எடுத்துவந்தார் பலபேர்கள்
பணவெள்ளம் பலனற்றுப் பாய்கின்ற
வழிமாற்ற வகையொன்று கண்டறிந்தாய்
திருநாட்கள் திருச்சடங்காய் மட்டுந்தான்
திருநாட்கள் அனைவர்க்கும் பொதுவென்றாய்

மறைப்பணி சிறப்புற முடித்திட்டாய்
குறைப்பணி கண்டு நீ குமுறினாய்
அறப்பணிக் கள்ளி நீ அளித்திட்டாய்
அருட்பணிக் காக்கள் அளித்திட்டாய்
திருப்பணி பொருட்பணி ஆகாது
சிறக்கவே சீர்அணி புகுத்தினாய்
இறைப்புகழ் இசைக்கவே ஏகினாய்
இறைவனோ டிரண்டறக் கலந்திட்டாய்.

இறைபுகழ் வாழ்க! எ. க. சூ. இறைபுகழ் வாழி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுகின்றோம்

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் 6ஆம் வட்டாரம் புதுவீதி கிறீஸ்து இராசா ஆலய முன்றலில் 6-8-72 இரவு 10 மணியளவில் பீ. எஸ். கலாமன்றத்தினரால் மேடையேற்றப்பட்ட அதிஸ்டப்பரிசு நாடகத்தின்போது நாட்டுக்கூத்துக் கலைஞர் நாடகசிரோன்மணி, நாட்டுக்கூத்துக் கலாநிதி திரு. ம. யோசேப்பு அவர்களைக் கௌரவித்து பொன்னுடை போர்த்தி நாட்டுகூத்துச் சக்கரவர்த்தி என்னும் பட்டம் வழங்கினர் கிறீஸ்துராசா ஆலயக் கட்டளைக்குரு வணக்கத்துக்குரிய குலாஸ் சுவாமிகள். மற்றும் பீ. எஸ். கலாமன்றத் தலைவர் எஸ் பாராசசிங்கம், நாடக இயக்குனர் திரு. சின்னராசா, கிறீஸ்துராசா இளைஞர் மன்றத்தலைவர் பிரான்சீஸ்ஜெனம் ஆகியோர் புகழுரை வழங்கினர். திரு. ம. யோசேப்பவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்


## கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்

நற்சிந்தனை :
19. 20, 21-8-72.
வழங்குபவர்
திரு. பேர்னுட்

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:—
திரு. செல்வம்,
அ. ம. தி.
சமூகத்தொடர்பு நிலையம்,
பேராயர் அகம்,
கொழும்பு—8.


## சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாக்க இந்தியாவில் கூட்டுமுயற்சி

இந்திய அரசியல் யாப்பிலுள்ள 30-வது ஷரத்தினால் அங்காட்டிலுள்ள சிறுபான்மை மக்களது உரிமைகள் பாதுகாக்கப்படுமென உறுதி அளிக்கப் பட்டிருந்தபொழுதிலும் அதற்கு அண்மையில் அரசாங்கத்தினால் கொண்டு வந்துள்ள திருத்தம் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதாயிருக்கின்றது. ஆகவே, கத்தோலிக்கரும், மறுகிறிஸ்தவ சபையினரும், இஸ்லாமிய மக்களும் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சாசன திருத்தத்துக்குத் தமது ஒன்றுபட்ட எதிர்ப்பைத் தெரிவிக்க எத்தனித்திருக்கின்றனர். சிறுபான்மையினர் தமது கலாச்சாரத்தை வளர்க்க கல்விச்சாலைகள் முதலியன நடத்திவர அரசியல் சாசனத்தினால் உரிமை உடையவர்களாயினும் இந்தஉரிமைகளுக்குப் பலவித தடைகளும் தற்போது ஏற்பட்டுள்ளது.

## "ஓய்வுபெறவோ நீ ஒழித்தாய்"

### ( மறைந்த ஆயருக்கு அஞ்சலி )

—[ ஜி. ஏ. பிள்ளை அடம்பன் ]—

நீண்ட நெடுந்துயிலில் நீமறைந்த செய்தியெமை
மூண்ட பெருந்தீயாய் மோதுவதேன் — ஆண்டாய்
அன்புப் பெருந்தகையே ஆயர் எமிலியானுஸ்
இன்பப் பெருக்கே எமக்கு.

முல்லைச் சிரிப்புனது முகத்தை மலரவைக்கும்
எல்லையில்லா அன்பால் எமையாண்டாய் — நல்லாய் நீ
அல்லும் பகலும் அயராதுழைத்தவனே
வெல்லும் பகை அன்பால் வென்றாய்.

எம்மதமும் சம்மதமாம் ஏதமிலா நின்வழிதான்
இம்மைதனில் என்றும் இதமளிக்கும் — என்றே
நித்தம் எடுத்துரைத்தாய் நித்தியத்தின் தூதுவனே
அத்தம் அடைந்திருந்தோம் ஆல்.

தாயாகி அன்புகந்தாய் தந்தையென வாழ்வளித்தாய்
சேயாக எம்மைச் சிந்தித்தாய் — ஓயாத
சேவையினால் உன்னைச் சிதைத்தாய் எமக்காக
ஓய்வு பெறவோ நீ ஒழித்தாய்.

பன்னீர் மலரெடுத்துன் பாதத்தில் வைக்க வந்தால்
கண்ணீர் மழையாலே கரைகின்றோம் — புண்ணியா
என்னீர்மை சொல்லி எம்மனத்தை ஆற்றுவோம்
உன்னீர்மைக் குண்டோ உவமை.

"அண்ணா அண்ணா"வென்று ஆரை அழைத்தாய் நீ
விண்ணு டேகினையோ வித்தகா — பொன்னாடாம்
மோட்ச பரன்யேசு முனனின் றழைத்தானோ
ஆட்சியிலே பங்குதர அங்கு.

எல்லாம் அவன்செயலென் றெண்ணி இருப்பவர்க்கே
எல்லாம் இனிதாதல் இல்லையோ—தொல்லுலகில்
'எல்லாம் சரி'யென்று ஏகினாய் எம்தந்தாய்
,வல்லான் வகுத்த வழியோ'?!

### மதுரகவி இ. நாகராஜனின் திடீர் மறைவு

யாழூரில் பிரபல கவிஞன், நல்ல எழுத்தாளன், எவரோடும் இன்சொற் பேசியுரையாடும் பண்பாளன், ஈழநாடு, கலைக்கண் பத்திரிகைகளின் ஆசிரியராய்க் கடமையாற்றி எல்லோராலும் அறியப்பட்டவர். கடந்த15-8-27 செவ்வாயன்று அகால மரணமுற்றுப் பரமபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவால் ஆறாத் துயருறும் மனைவி மக்கள், உற்றார் உறவினருக்கு காவலன் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### புதிய போலாந்து எல்லைகளை வத்திக்கான் ஏற்றுள்ளது

புதிய போலாந்தின் எல்லைகளை இப்பொழுதுதான் வத்திக்கான் ஏற்றுக்கொண்டு அதற்கான பரிபாலன ஒழுங்குகளைச் செய்திருக்கின்றது. 2-ம் யுத்தம் முடிவுபெற்றபோது ஜெர்மனி தேசத்துக்கு முன்சேர்ந்திருந்த சில பிரதேசங்கள் போலாந்து தேசத்துள் அடக்கப்பட்டன. இதுகாலவரையும் அப்பிரிவுகளிலுள்ள கத்தோலிக்கர் முன்போலவே பரிபாலிக்கப்பட்டு வந்தனர். ஆனால் அண்மையில் போலாந்துதேசத்துடன் வத்திக்கான் செய்திருக்கும் ஒழுங்குகளின்படி, அப்பிரிவுகளிலுள்ள மேற்றிராசனங்களும் போலாந்துதேச ஆயர் சபையின் ஞானஆதிக்கத்துள் அடக்கப்பட் டிருக்கின்றன.

✠

### சந்தியோகு பெரேரா (பொன்னுத்துரைமேசனார்) அவர்களின் முதலாம் வருட மரண ஞாபகம்

24—8—72

"என்றும் எமக்கினிய அப்பா!
இறைவன் பதம் வாழும்
அப்பா!
எம்மை இங்குத் தவிக்க விட்டு,
சென்றுவிட்டாய் எனப்பா!
இன்றுடன் ஓராண்டு
கழிந்ததப்பா!
இன்னமும் எம் கண்ணீர்
ஓய்ந்ததில்லை பாரப்பா!
துன்பகீதம் முடியவில்லை,
துயர்நெஞ்சில் மறையவில்லை,
தூயவனின் கருணையையுன்
மைந்தருக்காய் கோரப்பா!

24-8-72 வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு பள்ளிமுனை புனித ஊசியம்மாள் ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக்கண்ணுறும் அன்பர்கள் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்படி நன்றியுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்

இவரின் பிரிவால் துயருறும்: மனைவி: திருமதி சந்தியோகு பிலோமினா, மக்கள்: லீலா, அகஸ்ரா, பெர்ணண்டோ, எமிலியானுஸ், நேபேட், நீக்கிலாஸ். மருமகன்: அ. இம்மானுவேல் பெரேரா.

"அகஸ்ரா இல்லம்"
பள்ளிமுனை.

## காவலூரின் புனித....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டு மதிப்பும் கணிப்பும் பெற்றிருந்தனர். காலங்கண்ட காவலூர்ப் பெருமக்கள் இன்றும் புனித சூசையப்பர் சபைத்துறவிகளை மனமார நன்றிப் பெருக்கோடு வாழ்த்துவார்கள்.

1939-ம் ஆண்டு இக்கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்ற முதற்குரவர் காலஞ் சென்ற வண. ஏ. எஸ். யோசெவ் சுவாமிகளேயாவர். நிர்வாகத் திறனும், கருணையும், போற்றலும் பெற்றுத்திகழ்ந்த அடிகளார் மக்களின் நன்மதிப்பையும் பழைய மாணவரின் பேரன்பையும் பெற்று பாடசாலையைப் பலவழிகளிலும் மேம்பாடடையச் செய்தார். அவர் இக்கல்லூரியை மேல்மாடிகொண்ட சிறந்த கட்டிடமாய் அமைத்து பலவசதிகளையும் பெற்றுக்கொடுக்க கனவு கண்டார். அவர் கனவு நனவாக மாறுவதற்கு முன 1948-ம் ஆண்டில் அகாலமரணமடைந்தார். அவரது ஞாபகமாய் கிழக்குப்பக்க மண்டபம் நிற்கின்றது. 1948 சித்திரை முதல் செப்ரெம்பர் வரை வண. வில்[illegible]யம் யேசுதாசன் சுவாமிகள் [illegible]பொறுப்பேற்று நடாத்தினர். 1948 செப்ரெம்பர் முதல் 1952 வைகாசிவரை வண. எஸ். நீக்கிலாப்பிள்ளை அருள்நேசன் சுவாமிகள் அதிபராயிருந்தார். தெற்குகட்டிடமும் விஞ்ஞான கூடமும் அமைத்தவர் அவரே. ஆனி 1952 முதல் பங்குனி 1954 வரை வண. ஜே. ஏ. கருணாகரர் அதிபராயிருந்தார். அவரே மேற்குப்பகுதி கட்டிடத்தை உயர்த்தி ஓடிட்டு வேய்ந்தார். பங்குனி 1954 முதல் மாசி 1960 வரை வண. பி. ஜே. ஜீவரெட்டிணம் அடிகளார் அதிபராயிருந்தபோது கிழக்குப்பக்கமாய் முந்திய புனித சூசைப்பர் சபைத்துறவிகளின வீட்டை இடித்து புதிய கட்டிடம் அமைத்தார். மாசி 1960—1963; 1967 செப்ரெம்பர் —1970 தை வரை இருதடவைகள் வண. ஸ்ரனிஸ்லாஸ் அடிகளார் அதிபராயிருந்தார். 1963 செப்ரெம்பர் — 1967 வரை வண. பிதா எம். ஜே. மரியாம்பிள்ளை அடிகளார் அதிபராக கடமை ஆற்றினர். இன்று வண. பி. ஈ. அல்பிறட் அடிகளார் இக்கல்லூரியின் நூற்றாண்டைக் கொண்டாடும்பேறு பெற்றுள்ளார்.

பழைய மாணவர்பலர் ஊர் காவற்றுறையில் மட்டுமன்றி, லைடன் தீவிலும். மற்றும் அயல் ஊர்களிலும் இருந்து வந்து இங்கு கல்வி பயின்று ஈழம் எங்கும் பல்துறைகளிலும் சேவை ஆற்றி கல்லூரியின் புகழ்பரப்பி வருகின்றனர். மொழி இயல். அரசியல், சட்டம், வைத்தியம், பொறியியல, அரசாங்க சேவை, வர்த்தகம் என்னும் இன்னோரன்ன துறைகளிலும் சேவை அற்றுகின்றனர் என்றறியும் போது கல்லூரித்தாய்க்கு அது பெருமையே.

ஈழத்தின் முதல் தமிழ் ஆயரும், யாழ்நகரின் ஆயருமாயிருந்து இக்கல்லூரியை தனியார் பாடசாலையாக ஆக்கி அதை தாபரித்து வந்தவருமான காலஞ்சென்ற ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையவர்கள் இக்கல்லூரியின் பழைய மாணவராவார். கோலாலம்பூர் முதல் தமிழ் ஆயரான வங். டோமினிக் வேந்தர்கோன் ஆண்டகையும், திருமலையின் முதல் தமிழ்த்துணை ஆயரான வங். பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையும், யாழ் துணை ஆயரான வங். எல். ஆர். அன்ரனி ஆண்டகையும் இக்கல்லூரியின பழைய மாணவரெனின் இதைவிடப் பெருமை வேறென்ன வேண்டும். தென்கிழக்காசியாவின் சிறந்த கல்விமானும், ஈழத்தில் சிறந்த சிந்தனையாளனுமான வண. பிதா பீற்றர்பிள்ளை; தமிழறிஞரும்; மொழி ஆராய்ச்சி வல்லுனருமான வண. பிதா தனிநாயகம் அடிகளார் ஆகியோரும் இக்கல்லூரிப் பழைய மாணவரே. தீவுப்பகுதியின் முதற் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த திரு ஏ. எல். தம்பிஐயா அவர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான காலஞ்சென்ற வீ. ஏ. கந்தையா அவர்களும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களாவர்.

இவ்வாறு பல பெரியார்களை உருவாக்கி, புகழேணியில் நின்றிலங்கும் இத்தாபனம் நூற்றாண்டுவிழா கொண்டாடும இவ்வேளை அதை அடியிட்டு, வளர்த்து, பாதுகாத்து, கல்வியூட்டி, அதை நிருவகித்து பரிபாலித்த அனைவருக்கும் பழைய மாணவரும், பெற்றோரும், லைடன் தீவினரும் நன்றியுடையவராயிருப்பர் என்பது திண்ணம்.

### நன்றித் துதி

எனது கைவிரலில் ஏற்பட்ட இரணம் சத்திரசிகிச்சை செய்தும் குணமாகாமல் விரலை அகற்றினாலே குணப்படுத்த முடியுமென வைத்திய நிபுணர் அறிவித்த நிலையில் யேசுவின் கருணையினாலும் பரிசுத்த மரியாயின் மன்றாட்டினாலும் விரல் அகற்றப்படாமலே குணமடைந்ததை நன்றியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஓர் அடியாள்
[A 84-72] நாவாந்துறை

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஆவணி மாதம் 19-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org